பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 10 2023 12 40
வெள்ளிக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதம் ஆறு புள்ளி ஐந்து சதவீதமாகவே தொடரும் என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
2. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிக்கிம் மாநிலத்துக்கு பேரிடர் நிவாரணமாக 45 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.
3. தமிழகத்தில் சாகர் பரிக்கிரமா திட்டத்தின் கீழ் கடலோரப் பகுதிகளில் மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா, இணை அமைச்சர் திரு எல் முருகன் ஆகியோர் இன்று முதல் ஆய்வு மேற்கொள்கின்றனர்.
4. முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலை மாநிலத்தில் நிலவுவதாக தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.
5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

**[]<<<>>>[]**

வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்படவில்லை என ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

மும்பையில் இன்று நடைபெற்ற ரிசர்வ் வங்கி ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்ததாஸ், ரெப்போ வட்டி விகிதம் ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக தொடரும் என்றும், பணவீக்க விகிதம் ஐந்து புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்றும் அறிவித்தார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு ஆண்டில் ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வங்கிகளின் நிதி இருப்புக்கான கட்டமைப்பு நவீனமயமாக்கப் பட்டுள்ளதை அடுத்து, வங்கிகளில் பணப்புழக்கம் சீராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசு பங்குகளை வெளிச்சந்தையில் விற்பனை செய்வது குறித்தும் ஆராய்ந்து வருவதாக திரு சக்தி காந்ததாஸ் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சிக்கிம் மாநிலத்தில் வெள்ளத்தில் சிக்கியுள்ள பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் மற்றும் பாதுகாப்புப் படை வீரர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக பாதுகாப்புத்துறை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

குவஹாத்தியில் இதனை தெரிவித்த அவர், பல்வேறு பகுதிகளில் சிக்கியுள்ளவர்களை தேடுவதற்கு சிறப்பு ரேடார் கருவிகளும், மோப்ப நாய்களும், மலைப்பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக சிறப்புப் படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

வானிலை இன்று சீரடையும் பட்சத்தில், கூடுதலாக ஹெலிகாப்டர்களை பயன்படுத்தி, மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

ராணுவ விமானங்களும் பணியில் ஈடுபடுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, லாச்சென் பகுதியிலிலிருந்து ஆயிரத்து 471 சுற்றுலாப் பயணிகளை ராணுவத்தின் சிறப்புப் படையினர் மீட்டுள்ளனர்.

சிம்டாம்-க்கும் **Burdang-**க்கும் இடையேயான சாலை சீரமைக்கப்பட்டு, ஒரு வழிப்பாதை போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிக்கிம் மாநிலத்திற்கு பேரிடர் நிவாரண நிதியாக 45 கோடி ரூபாயை மத்திய அரசு அனுமதித்துள்ளது.

இந்த தொகை மாநில பேரிடர் மீட்பு நிதிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் சேதங்களை மதிப்பீடு செய்வதற்காக மத்திய அரசு அமைச்சகங்களுக்கு இடையேயான குழு ஒன்றை அமைத்துள்ளது.

விரைவில் அக்குழு அம்மாநிலத்துக்குச் சென்று வெள்ள நிலைமை குறித்து ஆய்வு செய்யும்.

வெள்ள நிலைமை குறித்து மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

அஸ்ஸாம் மாநிலத்திலும் பெய்து வரும் கனமழை காரணமாக குவாஹாத்தி நகரில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

அணில்நகர், நவின்நகர், மிருக்காட்சி சாலை ஆகிய பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளதால் சாலைகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளநீரை அப்புறப்படுத்துவது குறித்த கோரிக்கைகளை பொதுமக்கள் தெரிவிப்பதற்கு தொலைபேசி கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் சாகர் பரிக்கிரமா திட்டத்தின் கீழ் கடலோரப் பகுதிகளில் இன்று முதல் ஒன்பதாம் தேதி வரை ஆய்வு நடத்தப்படுகிறது.

மத்திய அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தின் முன்னேற்றம் குறிதது மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா மற்றும் இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் ஆகியோர் ஆய்வு மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று இரவு மதுரை வரும் அமைச்சர்கள், நாளை ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

வரும் ஞாயிற்றுக்கிழமை மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி செல்லும் அமைச்சர்கள் தரங்கம்பாடி, பூம்புகார், கடலூர் ஆகிய இடங்களில் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.

வரும் திங்கட்கிழமை விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை ஆகிய இடங்களில் அமைச்சர்கள் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

அனுமந்தை, புதுப்பட்டினம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள மீன் இறங்குதளங்களில் மீனவர்களுடன் அமைச்சர்கள் கலந்துரையாடவுள்ளனர்.

பின்னர் மாமல்லபுரத்தில் அகில இந்திய இறால் பண்ணை சங்கத்தின் கூட்டத்தில் அவர்கள் பங்கேற்கின்றனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில், மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் மீன்வளத் திட்டங்கள், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் குறித்து அமைச்சர்கள் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

பின்னர் திருவொற்றியூர் குப்பம், சென்னை மீன்பிடி துறைமுகம் ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று மீனவர்களுடன் கலந்துரையாடுகின்றனர்.

**[]<<<>>>[]**

மூளைவாத நோய் விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்தும், மற்றவர்கள் அவர்களிடத்தில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் உடனடியாக சிகிச்சை எடுத்துக் கொண்டால் பாதிப்புகளை பெருமளவு குறைக்க முடியும் என்று புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் பேராசிரியர் **Sheffali gulati** எமது செய்திப் பிரிவுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலை மாநிலத்தில் நிலவுவதாக தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் செயின்ட் கோபைன் நிறுவனம் தமிழக அரசுடன் இணைந்து மேற்கொள்ளும் விரிவாக்கப் பணிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்கள், முதலமைச்சரை சந்தித்தபோது இதனை தெரிவித்த அவர், மூவாயிரத்து 400 கோடி ரூபாய் முதலீட்டில் ஆயிரத்து 150 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் இந்த திட்டத்திற்கு தேவையான உதவிகளை செய்து தர அரசு ஆர்வமுடன் இருப்பதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் வீட்டு வரி மற்றும் சொத்து வரியை காலதாமதமாக செலுத்துவோருக்கு மாநில அரசு ஒரு சதவீத அபராத கட்டணம் விதிக்கப்படுவதற்கு அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் சொத்து வரி உயர்வு, மின் கட்டண உயர்வு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வினால் பொதுமக்கள் பொருளாதார ரீதியாக பாதிப்புக்கு

உள்ளாகியுள்ள நிலையில், ஒரு சதவீத அபராதக் கட்டணம் அவர்களை மேலும் பாதிப்புக்கு உள்ளாக்கும் என்று கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

சிவகங்கை மாவட்டத்தில் பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீன் விற்பனை அங்காடி மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு நிலையம் அமைக்க மகளிர் குழுவினர் மானியம் பெற்று பயன்பெறலாம்.

இதற்காக உதவி மாவட்ட மீன்வளத்துறை மூலம் செய்யப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - முருகன் ) ---40 செகண்ட்*

**[]<<<>>>[]**

விழுப்புரம் மாவட்டத்தில் பாரம்பரிய நெல் விதைகள் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் இதனை வாங்கி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*( வாய்ஸ்பைட் - சுரேஷ் ) ---30-- செகண்ட்*

**[]<<<>>>[]**

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் பங்ளாதேஷுக்கு எதிரான முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய பங்ளாதேஷ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஒவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 96 ரன் எடுத்தது,.

97 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா ஒன்பது புள்ளி இரண்டு ஓவரில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

**[]<<<>>>[]**

மகளிர் வில்வித்தை **Recurve** குழு பிரிவில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

ஹாக்கிப் பிரிவில் இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியா - ஜப்பானை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாதில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பாகிஸ்தான் - நெதர்லாந்தை அணியை எதிர்கொள்கிறது.

***End of News***